A

# அறிவித்தல்

அம்பதென்ன, பொல்லேகொட,1/36 ஆம் இலக்க முகவரியில் வசிக்கும் திரு. ஜீ.ஜீ.ரீ.பீ உதயசிறியின் பிள்ளை பழைய மாணவர் பிரிவின் கீழ் 58 புள்ளிகளை பெற்ற போதிலும் க/தர்மராஜ வித்தியாலயத்தில் 2015 ஆம் ஆண்டில் முதலாம் ஆண்டுக்கு அனுமதிக்கப்படாமை தொடர்பாக நிருவாக அலுவல்கள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளரிடம் (ஒம்புட்ஸ்மன்) மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு விசாரிக்கப்பட்டு, முறைப்பாட்டாளருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டதால் பாடசாலை அதிபரின் கடமை அதிகாரங்களுக்கமைய, அநீதிக்குள்ளான பிள்ளையை பாடசாலைக்கு அனுமதிக்குமாறு அவரால் செய்யப்பட்ட சிபார்சு அதிபரினால் கல்வி அமைச்சுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டதை தொடர்ந்து அது நிராகரிக்கப்பட்டுள்ளதால் நிருவாக அலுவல்கள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளரினால் (ஒம்புட்ஸ்மன்) 1994 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நிருவாக அலுவல்கள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளர் சட்டத்தின் 17(3) (இ) பிரிவின் கீழ் அவதானிப்பு மற்றும் கவனத்திற்கும் மேலதிக நடவடிக்கை கருதியும் எனக்கு அறிக்கையொன்று அனுப்பப்பட்டுள்ளதென்பதை அறிவிக்க விரும்புகின்றேன்.